# என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றிடுதே

என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றிடுதே
ஏன் மீட்பராம் கடவுளையே நினைந்து மகிழ்கின்றதே
தாழ்நிலை நின்ற அடிமைதனை
கடைக்கண் நோக்கி உயர்த்தி விட்டார்
தலைமுறை யாவும் இனியென்னை
பேறுடையாள் எனப் போற்றிடுமே

**1)**
வல்லமை மிக்கவர் என்றுமே நல்லவர்
அரும் பெரும் செயல் புரிவார்
அவரை அஞ்சும் எளியவர் நெஞ்சம்
இரக்கத்தை ஊற்றுகிறார்
இதயத்தில் செருக்குற்ற கல்மனத்தோரை
விரட்டியே அடித்திடுவார்
அரியணை மீது அமர்ந்திடுவோரை
அகற்றிடச் செய்திடுவார் - 2

( என் ஆன்மா )

**2)**
தாழ்நிலை நின்றவர் உயர்வினை அடைவர்
பசித்தோர் நலம் பெறுவர்
செல்வர் தம் செல்வம் புல்லரித்திடுமே
வெறுமையைக் கண்டிடுவார்
இறைவனின் வாக்கு அழிவது இல்லை
சத்தியம் அதுதானே
அடியவர் மீது இறைவனின் இரக்கம்
நிட்சயம் நிலைதானே - 2

( என் ஆன்மா )